# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 171/ந/2025, நாள் 07.01.2026

தா. பிரான்சிஸ்,
மார்த்தாண்டம்,
கன்னியாகுமரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். – எதிர்மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம், வடக்குத்தெரு, கமலா காம்பவுண்ட் கதவு எண்.31/177 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. தா. பிரான்சிஸ், என்பவரின் 29.03.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.04.2025 அன்று பெறப்பட்டு, 171/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம், வடக்குத்தெரு, கமலா காம்பவுண்ட் கதவு எண்.31/177 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. தா. பிரான்சிஸ், என்பவரின் 29.03.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"குழித்துறை நகராட்சி நிர்வாகம் மார்த்தாண்டம் சந்திப்பு, வடக்குத்தெரு, முபாரக்ஹோட்டல் முதல் NUNU கிட்ஸ் மழலையர்பள்ளிக் கூடம் வரை மழைநீர் ஓடை கட்ட 08.08.2024 அன்று மதிப்பீடு தயார் செய்து 29.08.2024 அன்று நகர்மன்ற ஒப்புதல் பெற்று 06.09.2024 அன்று ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தக்காரர்கள் திருமதி. P. சரோஜா, திரு. ஆன்றணி ஒப்பந்தம் கேட்டு திருமதி. சரோஜா மதிப்பீட்டை விட 13% சதவீதம் குறைவாகவும் ஆன்றணி அவர்கள் 0.69% சதவீதம் மதிப்பீட்டை விட அதிக தொகைக்கு கேட்டுள்ளனர். இருவருடைய ஒப்பந்த புள்ளிகளை ஒப்பிட்டு திருமதி. P. சரோஜா அவர்களுக்கு மேற்படி பணியினை வழங்க 10.09.2024 அன்று மன்ற ஒப்புதல் பெறப்பட்டு, 20.09.2024 அன்று ஆணையாளரும் ஒப்பந்தகாரரும் ஒப்பந்தம் ஏற்படுத்தி 20.09.2024 அன்று மேற்படி மார்த்தாண்டம் சந்திப்பு வடக்கு தெரு 17–ம் வார்டில் முபாரக் ஹோட்டல் முதல் NUNU KIDS பள்ளிகூடம் வரை மழைநீர் வடிகால் ஓடை கட்ட பணி ஆணையும் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் ஏற்படுத்தி பணி ஆணை வழங்குவதற்கு முன்னால், மேற்படி ஒப்பந்தக்காரர் பணியினை மார்த்தாண்டம் மகளிர் காவல்நிலையத்தின் முன்பிலிருந்து பணியினை ஆரம்பித்துள்ளார். 13.09.2024 அன்று அடித்தளகான்கிரீட் போடும் போது தரக்குறைவாக கலவையும் சரியான அளவுக்கு அடித்தளம் அமைக்காமல் பணி செய்வதனை பார்த்த நான் காலை 9.30 மணிக்கு பொறியாளரை 759874733

என்ற கைபேசியில் ஐந்து முறை தொடர்பு கொண்ட போது அழைப்பை ஏற்கவில்லை. அதன் பின்பு அன்று மாலை 4.30 மணியளவில் ஆணையாளரின் கைபேசி எண்ணை தெரிந்து கொண்டு 7397389928 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விவரத்தினை கூறினேன். உடனே பொறியாளரை அனுப்பி பார்க்க சொல்கிறேன் என்று கூறினார். யாரும் வரவில்லை. மீண்டும் அரைமணி நேரம் கழித்து ஆணையாளரை தொடர்பு கொண்டு கேட்ட போது பணிநல்ல படிதான் நடைபெறுகிறது. முறைகேடு என்றால் எழுத்து பூர்வமாக புகார் கொடுங்க என்று கூறினார். நான் 14.09.2024 அன்று பதிவு தபால் மூலம் புகார் மனு ஆணையாளருக்கும், நகர்மன்ற தலைவருக்கும் மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பினேன். அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து ந.க.எண்.வ2/382/2024 நாள் 30.10.2024–ன்படி மேற்படி மனு சம்மந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு விபரத்தினை மனுதாரருக்கும் ஆட்சிதலைவர் அலுவலகத்திற்கும் தெரிவிக்க வேண்டும் என்று பதில் வந்தது. நகராட்சி நிர்வாகத்திடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை. அதற்கு பின்பு, 11.12.2024 அன்று மாவட்ட ஆட்சிதலைவர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் உண்மைகளை விளக்கி மனு அனுப்பினேன். அதற்கும் எந்தவித பதிலும் வரவில்லை. அதன் பின்பு உரிய ஆவணங்களை இணைத்து நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் மற்றும் பொறியாளர் ஆகியோருக்கு நேரடியாக சென்று மனு கொடுத்தேன். இதுவரை எந்தவித பதிலும் வரவில்லை. மேற்படி பணியானது ஒப்பந்தம் மற்றும் பணி ஆணைகள் பெறுவதற்கு முன்பு ஒப்பந்தகாரர் பழைய ஓடையை உடைத்து மதிப்பீட்டின் படி முபாரக் ஹோட்டல் முதல் பணி செய்யாமல் சுமார் ஐம்பது மீட்டர் தள்ளி மகளிர் காவல் நிலையம் முன்பிலிருந்து ஓடைகளை தோண்டி ஒப்பந்தத்திற்கும் மதிப்பீட்டிற்கும் எதிராக வடக்குத்தெரு லட்சுமி விலாஸ் பேக்கரி வரை, ஓடைகளை உடைத்து அதிகமாகவும் ஆழப்படுத்தி கனிமவளத்தையும் பழைய ஓடையையும் திருடிச் சென்றுள்ளனர். இது குறித்து புகார் மனு கொடுத்தும் நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையாளர் மற்றும் உயர் அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. மேற்படி பணி சம்மந்தமாக நகர்மன்ற தலைவர் மற்றும் ஒப்பந்த குழுத் தலைவர் ஆணையாளர், பொறியாளர் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரும் சேர்ந்து திட்டம் போட்டு முறைகேடு செய்துள்ளனர்.

எனவே, மேற்படி எதிர்மனுதாரர்கள் மீது உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு வழக்கு பதிவு செய்து உள்ளாட்சி சட்ட விதிமுறைப்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

2) மனுதாரரின் புகார் மனு மீது விரிவான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 23.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் குழித்துறை நகராட்சி ஆணையரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3) குழித்துறை நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.1692/2024/இ1, நாள் 29.09.2025–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தை அளித்துள்ளார்.

"குழித்துறை நகராட்சியில் வார்டு எண் 17, வடக்குத் தெருவில் உள்ள முபாரக் ஹோட்டலின் அருகாமையிலுள்ள பிரதான கழிவுநீர் கால்வாய் அடைப்பு ஏற்பட்டு சாலையில் கழிவுநீர் வெளியேறியதால் கழிவுநீர் வடிகாலினை சரி செய்திட நகர்மன்ற தீர்மான எண். 968, நாள் 29.08.2024ல் ரூ.8.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டினை மன்றம் அனுமதி வழங்கியதின் அடிப்படையில் 06.09.2024ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் திருமதி P. சரோஜா என்ற ஒப்பந்ததாரரின் 0.13% மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற தீர்மானம் எண். 992 நாள் 19.09.2024ன் படி மன்றம் அனுமதி வழங்கியது. 20.09.2024ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது.

மேலும், குழித்துறை நகராட்சியின் கடித ந.க.எண். 1692/2024/இ1, நாள் 10.09.2024ன் படி ஒப்பந்ததாரருக்கு பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு LOA (Letter of Acceptance) வழங்கப்பட்டு பணியானது நடைபெற்றது. மேற்படி பணி நடைபெறும் இடமானது

முபாரக் ஹோட்டல் அருகில் உள்ள கழிவுநீர் ஓடையாகும். முபாரக் ஹோட்டல் அருகில் உயர்மின் அழுத்த மின்கம்பிகளும் தொலைபேசி இணைப்பு பெட்டி உள்ளதாலும் முபாரக் ஹோட்டல் அருகில் கழிவுநீர் கசிவு இல்லாததாலும் கழிவுநீர் ஓடை பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து அவசரம் கருதி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதனால் பணியானது முபாரக் ஹோட்டலில் இருந்து ஆரம்பிக்கப்படவில்லை.

மேற்குறிப்பிட்ட பணியானது தரமானதாகவும், குறிப்பிட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. எவ்வித குறைபாடுகளோ, முறைகேடுகளோ நடைபெறவில்லை பணி முடிவுற்றதும் அளவீடு செய்யப்பட்டு அதற்கான தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. இதனால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லை. பணியானது முழுமையாக முடிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வரப்பெற்றுள்ளது என்ற விவரத்தினை பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.''

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான குழித்துறை நகராட்சி ஆணையர் ஆகியோரை 29.09.2025 அன்று தூத்துக்குடி அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவத்தின் 11.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் 29.09.2025 அன்று தூத்துக்குடி அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

''மார்த்தாண்டம், வடக்குத்தெரு, வார்டு 17ல் உள்ள முபாரக் ஹோட்டலில் இருந்த ஓடை அமைத்தல் பணியை செய்யாமல் சுமார் ஐம்பது 50 மீட்டர் தள்ளி மகளிர் காவல் நிலையம் முன்பிலிருந்து ஓடைகளை தோண்டி ஒப்பந்த மதிப்பீட்டிற்கு எதிராக வடக்கு தெரு, லட்சுமி விலாஸ் பேக்கரி வரை ஓடைகளை உடைத்து பணி செய்துள்ளனர். இந்த ஓடை அமைத்தல் பணியில் போடப்பட்ட கான்கிரீட் தரமற்றதாக உள்ளது. கான்கிரீட்டில் உபயோகப்படுத்தப்பட்ட சிமென்ட் கலவையின் அளவு மிக குறைந்த அளவே பயன்படுத்தப்பட்டுள்ளது. சரியான மேற்பார்வை மேற்கொள்ளப்படவில்லை.

ஓடை அமைப்பதற்கான ஒப்பந்தம் 20.09.2025ல் தான் போடப்பட்டுள்ளது. ஆனால், பணி 12.09.2025 அன்றே தொடங்கிவிட்டார்கள். இதில் முறைக்கேடு உள்ளது. மேலும் மேற்படி பணி தொடர்பாக அதிகாரிகள், நகரமன்ற தலைவர் மற்றும் ஒப்பந்ததாரர்கள் சேர்ந்து திட்டம்போட்டு முறைகேடு செய்துள்ளனர்.

ஓடை அமைத்தல் பணி முபாரக் ஹோட்டல் முதல் பணி மேற்கொள்ளப்படவேண்டும்.

கேபிள் மற்றும் தொலைபேசி இணைப்பு கேபிள்கள் அங்கு அமைந்துள்ளதால் மேற்படி பணி 50 மீட்டர் தள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என நகராட்சியால் தெரிவிப்பது ஏற்க இயலாது. இப்பணியை தொடங்குவதற்கு முன்பு தொடர்புடைய துறைகளை அழைத்து திட்டமிட்டு பணிகளை மேற்கொள்ளாமல் பணிகள் மேற்கொள்ளப்பட்டது தவறானதாகும். அதனால் அதனை குழித்துறை நகராட்சி சரிசெய்து தரவேண்டும் என்பதை இம்முறைமன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ''

6) எதிர்மனுதாரரான குழித்துறை நகராட்சி ஆணையர் 29.09.2025 அன்று தூதுக்குடி அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

''மனுதாரர் தெரிவித்துள்ள ஓடை அமைக்கும் பணி முபாரக் ஹோட்டல் முதல் தொடங்காமல் சற்று 50 மீட்டர் தள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளது உண்மைதான். ஏனெனில், முபாரக் ஹோட்டல் அமைந்துள்ள பகுதியில் தொலைபேசி இணைப்பு மற்றும் பெரிய கேபிள்கள் புதைக்கப்பட்டுள்ளன. மேலும், அந்தப் பகுதி நெடுஞ்சாலை பகுதியில் அமைந்துள்ளது. மெயின் கழிவுநீர் பைப் செல்வதால்

அந்த இடத்தில் பணி மேற்கொண்டால் பாதிப்பு அதிகமாக இருக்கும். எனவே, ஓடை அமைக்கும் பணி 50 மீட்டர் தள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

மேலும், இப்பணியில் பயன்படுத்தப்பட்ட கான்கிரிட் கலவை மிகச் சரியான அளவிலே பயன்டுத்தப்பட்டுள்ளதை பணி மேற்பார்வையாளர் உறுதி செய்துள்ளார்.

முன்னதாக இந்த கழிவுநீர் ஓடையில் அடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் சாலையில் வெளியே வந்ததால் நகராட்சி சுகாதார ஆய்வாளர் மூலமாக மேற்படி கால்வாயினை ஜேசிபி மூலம் அடைப்பு எடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதையே மனுதாரர், ஒப்பந்தப்புள்ளிக்கு முன்னதாக பணிமேற்கொள்ளப்பட்டது என தெரிவித்துள்ளார்.

மேற்காணும் தகவல்களை இம்முறை மன்ற நடுவத்தின் முன் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். '' என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான குழித்துறை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம், தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரம் கண்டறியப்பட்டன.

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் சந்திப்பு வடக்குத்தெரு வார்டு 17–ல் உள்ள முபாரக் ஹோட்டல் முதல் NUNU கிட்ஸ் மழலையர் பள்ளிக்கூடம் வரை மழைநீர் ஓடை கட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நகர்மன்ற ஒப்புதலுடன் குறைந்த விலைப்புள்ளி அளித்தவருக்கு பணி ஒப்பந்தம் அளிக்கப்பட்டுள்ளது என்பதும், பணி ஒப்பந்தம் பெறுவதற்கு முன்பே ஒப்பந்ததாரரால் பணி தொடங்கப்பட்டுள்ளது என்பதும், சரியான மேற்பார்வையின்றி ஒப்பந்த மதிப்பீட்டிற்கு எதிராக முபாரக் ஹோட்டலில் இருந்து பணி தொடங்காமல் சுமார் 50 மீட்டர் தள்ளி மகளிர் காவல் நிலையத்திலிருந்து வடக்கு தெரு, லட்சுமி விலாஸ் பேக்கரி வரை ஓடைகளை உடைத்து தரமற்ற வகையில் கான்கிரீட் போட்டு பணி செய்யப்பட்டுள்ளது என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய வருகிறது.

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வடக்குத்தெருவில் உள்ள முபாரக் ஹோட்டலின் அருகில் பிரதான கழிவுநீர் கால்வாயில் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் சாலையில் வெளியேறியதால் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் வடிகாலினை சரி செய்திட நகர்மன்ற அனுமதியுடன் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு 20.09.2024–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது என்பதும், நெடுஞ்சாலை பகுதியில் அமைந்துள்ள முபாரக் ஹோட்டல் அருகில் தொலைபேசி இணைப்பு மற்றும் பெரிய கேபிள்கள் புதைக்கப்பட்டுள்ளதால், ஓடை அமைக்கும் பணி 50 மீட்டர் தள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதும், கழிவுநீர் ஓடையில் அடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் சாலையில் வெளியேறியதால் நகராட்சி சுகாதார ஆய்வாளர் மூலம் கால்வாய் அடைப்பை ஜேசிபி முலம் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டதை, ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு முன்னதாக ஒப்பந்த பணி மேற்கொள்ளப்பட்டதாக மனுதாரர் தெரிவித்துள்ளார் என்பதும், பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு LOA (Letter of Acceptance) வழங்கப்பட்டு கழிவு நீர் ஓடை பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், குறிப்பிட்ட மதிப்பீட்டில் எவ்வித குறைபாடுகளோ, முறைகேடுகளோ இன்றி பணி தரமானதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், முடிவுற்ற பணியினை அளவீடு செய்யப்பட்டு, அதற்கான தொகை விடுவிக்கப்பட்டுள்ளதால், நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படவில்லை என்பதும் எதிர்மனுதாரரான குழித்துறை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய வருகிறது.

இந்நேர்வில்,

(1) குழித்துறை நகராட்சி மூலம் மார்தாண்டம், வடக்குத்தெரு, வார்டு –17ல் முபாரக் ஹோட்டலில் இருந்து ஓடை அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டுள்ள நிலையில், மேற்படி முபாரக் ஹோட்டலில் இருந்து ஓடை அமைக்கும் பணி தொடங்காமல்

50 மீட்டர் தள்ளி பணி தொடங்கப்பட்டதில் அரசுக்கு ஏதேனும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதா என்பதையும், ஒப்பந்தபுள்ளியில் முறைகேடுகள் ஏதேனும் நிகழ்ந்துள்ளதா என்பதையும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை மூலம் தணிக்கை மேற்கொண்டு, தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

(2) மேலும், மேற்படி ஓடை அமைக்கும் பணி தரம் வாய்ந்ததாக அமைக்கப்பட்டுள்ளதா என்பதை நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், திருநெல்வேலி மூலம் கள ஆய்வு செய்து, அறிக்கை பெற்றிடவும், அவ்வறிக்கையின் அடிப்படையில் மேல் நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 07–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. தா. பிரான்சிஸ்,
31/177, கமலா காம்பவுண்ட்,
வடக்குத்தெரு, மார்த்தாண்டம்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 165
2 நகராட்சி ஆணையர்,
குழித்துறை நகராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.
3 நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.
4 இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்